## அரிசி விற்பனைக்கு பின்னாலுள்ள அடாவடித்தனங்கள்

## கட்டுப்பாட்டில் அரிசி விலை ஆனால் விலை குறைந்தபாடில்லை

**( கனக நமநாதன் )**

கடந்த பெரும் போக நெற் செய்கை நாட்டில் மழையின்மையாலும் நிலவிய வரட்சியான கால நிலைமை காரணமாகவும் அழிந்துவிட்டது. இதன் காரணமாக அரிசியின் விலை ஏற்றமடையத் தொடங்கியது. ரூபா. 80.00 திற்கு விற்கப்பட்ட அரிசி ரூபா. 110.00 திற்கும் கூடுதலாக விற்கப்பட்டது. பெரும் முதலாளிகளினால் அரிசி மூடைகள் பதுக்கப்பட்டன. இந்த நிலைமையை கட்டுப்படுத்த அரசாங்கம் அரிசியை இறக்குமதி செய்யத் தீர்மானித்தது. இதுவரை 51919 மெற்ரிக் ரொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவிக்கின்றது. இன்னும் கூடுதலாக இறக்குமதி செய்யவும் உத்தேசித்துள்ளது.

அவை விற்பனைக்கு விடப்பட்டுள்ளதென்றும் பச்சை (தீட்டல்) அரிசியின் கட்டுப்பாட்டு விலை ரூபா. 70.00 என்றும் நாடு ரூபா. 72.00 என்றும் சம்பா அரிசி ரூபா. 80.00 என்றும் கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இக் குறிப்பிட்ட விலைக்கு கூடுதலாக விற்கப்பட்டால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என அரசு தெரிவித்திருந்தாலும் எவ்வாறான நடவடிக்கை என்ற விபரம் தெளிவில்லை. பதுக்கி வைத்திருப்பவர்களையும் கூடிய விலைக்கு விற்பவர்களையும் சுற்றி வழைத்துப் பிடிக்க அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது. பின்னர் இலங்கை பூராவுக்குமாக 1977 என்ற இலக்க தொலை பேசி இலக்கத்தை மட்டும் கொடுத்து அரிசியை பதுக்குபவர்களையும் கூடிய விலைக்கு விற்பவர்களையும் கட்டுப்படுத்தலாம் என அரசு நினைத்தது.

ஆனால் வியாபாரிகளோ கட்டுப்பாட்டு விலைக்கு அரிசியை விற்கவில்லை. இறக்குமதி செய்த அரிசியைத்தான் கட்டுப்பாட்டு விலைக்கு விற்கலாம் ஏற்கெனவே உள்ளூரில் விற்பனையிலுள்ள உள்ளூர் நாடு உள்ளூர் சம்பா போன்ற அரிசி வகைகளை கட்டுப்பாட்டு விலைக்கு விற்கமுடியாது என்ற பிரச்சினையை முற்போட்டார்கள். இதனால் அரசாங்கம் தனது கட்டுப்பாட்டு விலையின் இறுக்கத்தை குறைத்து உள்ளூர் அரிசி விற்பனையையும் கவனத்திற்கு எடுத்துள்ளது.

இறக்குமதி சம்பா ரூபா 80.00 உள்ளூர் சம்பா ரூபா. 90.00 இறக்குமதி நாடு ரூபா 72.00 உள்ளூர் நாடு ரூபா 80.00 இறக்குமதி பச்சை ரூபா 70.00 உள்ளூர் பச்சை ரூபா 78.00 என விலை வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

எதுவாயிருந்தாலும் பொது மக்கள் முறையிடுவதற்கேற்ற மாவட்ட ரீதியான ஏற்பாடுகள் செய்யப்படவில்லை. மாவட்டத்தில் யாரிடம் முறையிட வேண்டும்? என்பதும் எந்த தொலை பேசி எண்ணுக்கு அறிவிக்க வேண்டும்? என்பதும் அதற்கு உடனடி நடவடிக்கை எடுப்பார்களா? என்ற விபரங்களை வெளியிடாது வெறுமனே கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதெல்லாம் பொது மக்களுக்கு நன்மையையளிக்காத ஒரு ஏமாற்று வித்தை மட்டுமே.

**விலைக் கட்டுப்பாட்டை அமுல்படுத்த விலைக் கட்டுப்பாட்டு அதிகாரிகள் ஊர்கள் கிராமங்கள் கடை வீதிகள் தோறும் சென்று நிலைமையை கண்காணிக்க வேண்டும். கடைகளில் குறித்த அரிசிகளின் விலைப்பட்டியல் பலகை பொது மக்கள் பார்வைக்கு வைப்பிக்கச் செய்ய வேண்டும்.**

இந்த செயற்பாடுகளை அரசு செய்யாவிட்டால் கட்டுப்பாட்டு விலை அறிவிப்பு என்பது வியாபாரிகளுக்கு மறைமுகமாக உதவுவதாகவே அமையும்.

ஏற்கெனவே ஊழல் வீண் விரையம் என்ற குற்றச்சாட்டில் 15 அரச நிருவனங்கள் ரூபா. பதினொறு ஆயிரம் கோடி பணத்ததை வீணடித்துள்ளதாக கோப் குழு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் ச. தோ. ச. நிருவனமும் பணத்தை ஏப்பமிட்ட ஒரு அரச நிருவனமாகும். அந்த ச. தோ. ச. நிருவனத்திற்கும் 3000 மெற்றிக் ரொன் அரிசியை இறக்குமதி செய்ய அரசாங்கத்தால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

பாவனைக்கு உதவாத அரிசி பதுக்கி வைக்கப்பட்டிருப்பதை பல இடங்களில் அதிகாரிகள் கண்டு பிடித்துள்ளார்கள். இதனால் இலங்கையில் சாப்பாட்டுக்கான அரிசி விற்பனை இடைத் தரகர்களினால் கையாளப்பட்டு அரசையையும் பொது மக்களையும் ஏமாற்றி என்ன விதத்தில் இலாபத்தை அடைகின்றார்கள் என்பது பெரிய தில்லுமுல்லான வேலைப்பாடுகளைக் கொண்டதாகத் தெரிகின்றது.

***அரச நிருவனங்கள் சகலதும் ஆட்சியாளர்களின் கையாட்களினாலேயே நிருவகிக்கப்படுகின்றன. நெல் குற்றும் ஆலைகளின் உரிமையாளர்கள் பலர் அரசியல்வாதிகளோ அல்லது அவர்களின் கையாட்களாகவோ இருக்கின்றார்கள். எந்த அரசியல் கட்சி ஆட்சியமைத்தாலும் அவர்களின் கைப்பொம்மைகளின் ஊழல் மோசடி சித்து விளையாட்டிலிருந்து பொதுமக்களுக்கான சேவைகள் நேர்மையானதாக நடைபெறமாட்டாது. சொத்துகள் பாதுகாக்கப்படமாட்டாது. ஊழல் பேர்வழிகளின் பணமோசடிக்காக நாட்டின் அரிசி பதுக்கி வைக்கப்பட்டு வீண் விரையமாக்கப்படுகின்றது. அதனை ஈடு செய்ய அரிசி இறக்குமதிசெய்யப்பட்டு அன்னிய செலாவணி வீணடிக்கப்படுகின்றது.***

இந்த மோசடிப் பேர்வழிகளின் பதுக்கலால் அரிசி பாவனைக்கு உதவாததாக்கி பின் அரிசி இறக்குமதியால் அன்னிய செலாவணியையும் இழக்கின்றோம். இதனை ஈடு செய்ய பொது மக்கள் வரிப்பணம் செலுத்த ஆளாக்கப்பட்டுள்ளார்கள்.